RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 69 | மார்ச்.18 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘‘திமுக ஆட்சியை விரட்டியடிக்க தமிழக மக்கள் முடிவு செய்துவிட்டனர்’’ : எடப்பாடி பழனிசாமி

சென்னை: மார்ச்.18-

‘‘2021 தேர்தலுக்காக 525 வாக்குறுதிகளை திமுக வெளியிட்டது. அதில் நான்கில் ஒரு பங்கினை கூட திமுக அரசு நிறைவேற்றவில்லை. இந்த உண்மையை மக்கள் புரிந்துகொண்டனர். எனவே, திமுக ஆட்சியை விரட்டியடிக்க தமிழக மக்கள் முடிவு செய்துவிட்டனர்’’ என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திமுக அரசுக்கு எதிராக என்டிஏ கூட்டணிக் கட்சிகள் சார்பில் சென்னை விருகம்பாக்கத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேசிய எடப்பாடி பழனிசாமி, “தமிழகம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தன் குடும்பம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையில் உள்ள மு.க.ஸ்டாலின் தமிழகத்தை ஆட்சி செய்தார். இப்போது மக்களுக்கு விடிவுகாலம் பிறக்கும் நேரம் வந்துவிட்டது. திமுக ஆட்சி அமைந்தது முதலே தமிழகத்தில் சர்வ சாதாரணமாக கிராமம் முதல் நகரம் வரை ஜரூராக போதைப்பொருள் விற்பனை நடந்துகொண்டிருக்கிறது.

நம் குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க வேண்டும் என்ற கனவோடு பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்புகிறோம். ஆனால், திமுக ஆட்சியில் பள்ளிகள், கல்லூரிகள் அருகிலே நடக்கும் கஞ்சா விற்பனையால் மாணவர்கள் சீரழியும் காட்சியை பார்க்கிறோம். நெல்லையிலே 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகள் மது அருந்தும் காட்சி வெளியாகி வேதனையை ஏற்படுத்தியது. இதனைப் பற்றியெல்லாம் ‘அப்பா’ ஸ்டாலின் கவலைப்படவே இல்லை.

இதுபோன்ற குற்றங்களை கண்டறியும் உளவுத் துறை தமிழகத்தில் இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. குற்றங்கள், போதைப்பொருள் விற்பனை குறித்து அரசுக்கு உளவுத்துறை தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், உளவுத் துறை ஸ்டாலின் குடும்பத்தின் ஏவல் துறையாக இருக்கிறது. போதை ஆசாமிகளை பிடிக்க செல்லும் காவலர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தப்படுகிறது.

பயிரை காக்கும் வேலியாக இருக்கும் காவல்துறைக்கே இப்போது பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. சென்னையில் ஒரு கட்சியின் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங், பட்டப்பகலில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார், இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நெல்லை காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் படுகொலையிலும் இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

கிருஷ்ணகிரியில் திமுகவை சேர்ந்த ஒருவர் 2 வயது குழந்தையை பாலியல் துன்புறுத்தல் செய்த கொடுமை நடந்தது. நாமக்கல்லில் வீதியில் விளையாடிய 9 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். விளாத்திக்குளத்தில் பள்ளி மாணவி கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிபிஐ விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது, அதனை எதிர்த்து திமுக அரசு மேல்முறையீடு செய்தது. கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 61 பேர் உயிரிழந்த விவகாரத்தில், சிபிஐ விசாரணைக்கு எதிராக திமுக அரசு மேல்முறையீடு செய்தது. இப்படி குற்றவாளிகளுக்கு துணை நிற்கும் அரசாக திமுக அரசு உள்ளது.



அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கை திமுக அரசு நீர்த்துப் போக செய்துள்ளது. அதிமுக ஆட்சி அமைந்ததும், இந்த விவகாரத்தில் உண்மை குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

கரூரில் ரவுடிகளை வைத்து 3,000 லாரிகளில் தினமும் ரூ 1.5 கோடிக்கு மணல் கடத்தப்படுகிறது. அதிகாரிகள் துணையுடன், திமுக முன்னாள் அமைச்சர் இந்த கனிமவளக் கொள்ளையில் முழுமையாக ஈடுபட்டுள்ளார். இதுவரை பணம், நகையை திருடியே பார்த்திருப்போம். ஆனால், மனித உடல் உறுப்புகளையே திருடும் ஆட்சி திமுக ஆட்சிதான். நாமக்கல்லில் வறுமை காரணமாக ஏழைகளிடம் சிறுநீரகத்தை, திமுக எம்எல்ஏவின் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முறைகேடாக திருடியுள்ளனர். இதன் மீது எந்த நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை.

நகர்ப்புற வளர்ச்சித்துறையில் நடந்த முறைகேடுகள் குறித்து அமலாக்கத்துறை நடத்திய சோதனையின் மீதான ஆதாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், அதன் மீது எப்ஐஆர் பதிவு செய்ய நீதிமன்றம் அறிவுறுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. டாஸ்மாக் பாட்டில் விற்பனை மூலம் 24 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளது.

திமுக ஆட்சியில் அனைத்துப் பொருட்களின் விலைவாசியும் கடுமையாக உயர்ந்துவிட்டது. ஆனால், அதனைப் பற்றி கவலைப்படாமல் தொடந்து போட்டோஷூட் நடத்துகிறார் ஸ்டாலின். திமுக ஆட்சியில் மின் கட்டணம் பன்மடங்கு உயர்ந்துவிட்டது. அதிமுக ஆட்சியில் 1000 ரூபாய் மின்கட்டணம் செலுத்தியவர்கள் இப்போது 2500 ரூபாய் செலுத்துகிறார்கள். சொத்துவரி, கட்டட அனுமதி கட்டணம் பலமடங்கு உயர்ந்துள்ளது.

இந்தியாவிலேயே தமிழகம்தான் முதல் மாநிலம் என ஸ்டாலின் சொல்கிறார். ஆனால், கடன் வாங்குவதில்தான் தமிழகம் முதல் மாநிலமாக உள்ளது. இந்த ஆண்டு பிறந்தது முதல் கடந்த 75 நாட்களில் மட்டும் 246 கொலைகள் தமிழகத்தில் நடந்துள்ளன. இந்த ஆட்சியில் குழந்தைகள், சிறுமிகள், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. இந்த செய்தியை கூட அதிகாரிகளை வைத்து பேட்டி கொடுக்கிறார்கள். ஆட்சியாளர்களால் தைரியமாக மக்களிடம் பேச முடியவில்லை. அஜித் குமார், ஆகாஷ் ஆகியோர் லாக் அப் மரணத்தால் உயிரிழந்தனர்.

2021 தேர்தலுக்காக 525 வாக்குறுதிகளை திமுக வெளியிட்டது. அதில் நான்கில் ஒரு பங்கினை கூட திமுக அரசு நிறைவேற்றவில்லை. ஆனால், 98 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக ஸ்டாலின் சொல்கிறார். உண்மையை மக்கள் புரிந்துகொண்டனர். இந்த ஆட்சியை விரட்டியடிக்க தமிழக மக்கள் முடிவு செய்துவிட்டனர்.

அரசு ஊழியர்கள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், தூய்மைப்பணியாளர்கள் தொடர்ந்து போராடுகின்றனர். இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம் தமிழகத்தில் நிரந்தர சட்டம் ஒழுங்கு டிஜிபி நியமிக்கப்படவில்லை. நீதிமன்றம் குறிப்பிட்டும் 9 மாதங்களாக டிஜிபியை நியமிக்க திராணியற்ற அரசாக திமுக அரசு உள்ளது. ஊழல் மற்றும் குடும்ப ஆட்சி நடத்தும் திமுகவுக்கு முடிவு கட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது. சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும்’’ என தெரிவித்தார்.

## “ரஜினியை மிரட்ட வேண்டிய அவசியமே திமுகவுக்கு இல்லை” : அமைச்சர் ரகுபதி

சென்னை: மார்ச்.18-

“ரஜினிகாந்தை யாரும் மிரட்டி அடிபணிய வைக்க முடியாது. அவர் அன்புக்கு மட்டுமே அடிபணிபவர்; மிரட்டலுக்கு அல்ல. அவரை மிரட்ட வேண்டிய அவசியமே திமுகவுக்கு இல்லை’’ என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: “போதைப் பொருள் நடமாட்டம் குறித்து கண்காணித்து, நடவடிக்கை எடுக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். எடப்பாடி பழனிசாமி பொய்யான புகாரை முன்வைத்து வருகிறார். போதைப் பொருள் சப்ளை செய்கிறவர்களையே தனது கட்சியில் வைத்திருந்தவர் பழனிசாமி.

எடப்பாடி பழனிசாமி கட்டுப்பாட்டில் அதிமுக இல்லை. கட்சியில் உள்ள இரண்டாம் கட்ட தலைவர்களும் அவரின் பேச்சை கேட்பதில்லை. கூட்டணி அமையாத விரக்தியில் பழனிசாமி இப்படி பேசியுள்ளார். கட்சித் தலைவர் (பொதுச் செயலாளர்) பதவியை தக்க வைக்க வேண்டும் என்ற ஒரே இலக்குடன் செயல்பட்டு வருகிறார். மக்கள் எடப்பாடியை நம்ப தயாராக இல்லை. பலர் வெளியேறி விட்டனர். அதிமுக ஊசலாட்டத்தில் உள்ளது.

பெண்களுக்கு எடப்பாடி பழனிசாமி மீது ஏன் திடீர் பாசம்? அதிமுக ஆட்சியில் புகார் கொடுத்த பெண்களையே காட்டிக் கொடுக்கும் வேலை நடந்தது. ஆனால் தற்போது திமுக அரசு மீதுள்ள நம்பிக்கையால், பெண்கள் துணிந்து புகார் கொடுக்கின்றனர். எடப்பாடி பழனிசாமி பொய்யான புகார்களை கூறிவருகிறார்.

ரஜினிகாந்த் ஒரு சூப்பர் ஸ்டார். அவரை யாரும் மிரட்டி அடிபணிய வைக்க முடியாது. அவர் அன்புக்கு மட்டுமே அடிபணிபவர்; மிரட்டலுக்கு அல்ல. இது உங்களுக்கும் தெரியும். அவர் திமுகவுக்கு நெருங்கிய நண்பர். எங்களுக்குக்காக 1996ல் குரல் கொடுத்தவர். அவரை மிரட்ட வேண்டிய அவசியமே திமுகவுக்கு இல்லை.

மார்ச் 23க்குள் திமுக கூட்டணி பேச்சுவார்த்தை தொகுதிப் பங்கீடு நிறைவடையும். 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவோம். எங்கள் கூட்டணி மக்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக அமைதி பூங்காவாக இருக்கிறது’’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, “ரஜினிகாந்த். தமிழக அரசியலுக்கு வந்து சிஸ்டத்தை மாற்ற வேண்டும் என்று விரும்பினார். ஆனால் திமுக ரஜினிகாந்துக்கு பல மிரட்டல்களை கொடுத்தது” என்று தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா கூறியிருந்தார். அதற்கு பதிலடி கொடுத்த ரஜினிகாந்த், “காலம் பேசாது, ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்” என்று கூறியிருந்ததும் கவனிக்கத்தக்கது. அவருக்கு நடிகர் ரஜினிகாந்த் பதிலடி கொடுத்துள்ளார்.

## படுகொலையை ராணுவ நடவடிக்கையாக மாற்ற முயற்சி: பாக்.,கிற்கு இந்தியா கடும் கண்டனம்

புதுடில்லி: மார்ச்.18-

ஆப்கன் மருத்துவமனையில் 400 பேர் உயிரிழக்க காரணமான பாகிஸ்தான் தாக்குதலுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அங்கு பெரிய படுகொலையை நிகழ்த்திவிட்டு ராணுவ நடவடிக்கை போல் மாற்ற அந்நாடு முயற்சி செய்கிறது என தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கும் அதன் அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கும் சமீப நாட்களாக டிடிபி பயங்கரவாத அமைப்பு விவகாரத்தில்மோதல் நிலவி வருகிறது. ஆப்கன் மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்திவருகிறது. இந்நிலையில், நேற்று ஆப்கன் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 400 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 250 பேர் காயம் அடைந்தனர். இதனை முதலில் மறுத்த பாகிஸ்தான் பிறகு ஒப்புக் கொண்டது. மேலும், தனது செயலை நியாயப்படுத்த, தாக்குதலுக்கு பிறகு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்ததாகவும், அங்கு வெடிபொருள் கிடங்கு இருந்ததை காட்டுகிறது எனவும் தெரிவித்து இருந்தது.

## சென்னையில் 785 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை: மாவட்ட தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை: மார்ச்.18-

தேர்தல் பிரச்சார அனுமதியை இணைய வழியில் விண்ணப்பித்து பெற வேண்டும் என்று, அரசியல் கட்சிகளுக்கு மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாவட்டத்தில் அமலில் இருக்கும் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் விளக்கும் கூட்டம், மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தின் முடிவில் குமரகுருபரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 28.30 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

இத்தொகுதிகளில் 4,085 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போலீஸ் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கொண்ட 375 மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் வாக்கு இயந்திரங்களை தயார் செய்யும் பணி, வாக்கு இயந்திரங்களை வாக்குச்சாவடிக்கு அனுப்பி வைத்தல், வாக்குப்பதிவு முடிவடைந்த பின்னர், வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். வாக்குச்சாவடி அலுவலர்கள் 16,500 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு தொகுதி வாரியாக பயிற்சி அளிக்கப்படும்.



சென்னை மாவட்டத்தில் 13,634 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், 6,349 கட்டுப்பாட்டுக் கருவிகளும் சரிபார்க்கப்பட்டு இருப்பில் உள்ளன. ஒவ்வொரு தொகுதிக்கும் 3 பறக்கும் படைகள் என்ற வீதம் 48 பறக்கும் படைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை, தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் 3 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் வீதம் 48 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த குழுக்கள், வாகனத் தணிக்கையில் ஈடுபடும். தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒன்று வீதம் 16 வீடியோ கண்காணிப்பு படைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கட்சிக் கூட்டங்கள் நிகழ்வுகளை இந்த படைகள் பதிவு செய்யும். தேர்தல் விதிமுறைகள் ஏதேனும் இருப்பின் நடவடிக்கை எடுக்கும்.

ரிப்பன் மாளிகையில் மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுப்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது. அதை 18004257012 என்ற எண்ணில் தொடர்புகொண்டு விதிமீறல் தொடர்பாக புகார் தெரிவிக்கலாம். ஒரு தொகுதியில் ஒரு வேட்பாளர் ரூ.40 லட்சம் வரை செலவு செய்யலாம்.

ஒவ்வொரு செலவினத்துக்கான விலைப்பட்டியல் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தலுக்காக பேரணி, கூட்டம் நடத்த உள்ள இடங்கள், காவல் துறை மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஒற்றைச்சாளர முறையில் கூட்டங்கள் நடத்துவது, வாகனங்களை பயன்படுத்துவது போன்றவற்றுக்கு உரிய அனுமதியை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பாளர்கள், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் போன்ற 6 வகையான இனங்களுக்கு அனுமதி பெறுவதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் சுவிதா (Suvidha) என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

https://suvidha.eci.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். ஆர்கே நகர், திருவிக நகர், ராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம்திருவல்லிக்கேணி ஆகிய 5 தொகுதிகளுக்கு ராணி மேரி கல்லூரியிலும், பெரம்பூர், கொளத்தூர்.

வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் ஆகிய 6 தொகுதிகளுக்கு லயோலா கல்லூரியிலும், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகிய 5 தொகுதிகளுக்கு கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்திலும் வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தற்போது 178 அமைவிடங்களில் 785 வாக்குச்சாவடிகள் பதற்றமான வாக்குச் சாவடிகளாக உள்ளன. பேனர் மற்றும் போஸ்டர்கள் முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. இந்த முறை சென்னையில் 80 சதவீதம் வரை வாக்குப்பதிவு நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## 2 நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.880 குறைவு

சென்னை, மார்ச்.18-

சர்வதேச முதலீட்டாளர்கள், தங்கத்தில் முதலீடு செய்வதை குறைத்துள்ளனர். இதனால், நம் நாட்டில் அதன் விலை குறைந்து வருகிறது. தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை, 22 காரட் ஆபரண தங்கம் கிராம், 14,760 ரூபாய்க்கும், சவரன், 1,18,080 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 280 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

நேற்றைய நிலவரம்

(மார்ச் 16), தங்கம் விலை கிராமுக்கு, 50 ரூபாய் குறைந்து, 14,710 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சவரனுக்கு, 400 ரூபாய் சரிவடைந்து, 1,17,680 ரூபாய்க்கு விற்பனையானது.

நேற்றைய நிலவரம்

இந்நிலையில் நேற்று (மார்ச் 17) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 480 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு 60 ரூபாய் குறைந்து, ஒரு கிராம் 14,650 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கடந்த இரண்டு நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு 880 ரூபாய் குறைந்துள்ளது.







# நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளையின் சார்பாக மகளிர் தின கொண்டாட்டம்

திண்டுக்கல் மார்ச். 18-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை நிர்வாகிகள் உலக மகளிர் தினம் 2026 இன் இந்த வருடக்கருப்பொருள் "கிவ் டு கெயின்" என்பதாகும். இது பெண்களுக்கான பரஸ்பர ஆதரவை கொடுக்க வலியுறுத்துகிறது. அவ்வாறு தலைமை அதிகாரம் , சமத்துவ கல்வி, வேலைவாய்ப்புகள் கொடுக்கும்போது ஒட்டுமொத்த சமூகமும் உயர்கிறதுபெண்ணின் மகத்துவத்தினை உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8ந்தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. அதன்படி நம்பிக்கை சிறிதுகள் அறக்கட்டளை சார்பாக உலக மகளிர் தின விழா மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் வழங்கும் விழா. மற்றும் தூய்மை காவலர்களுக்கு உதவிகள் வழங்கும் விழா முப்பெரும் விழாவாக கொண்டப்பட்டது. இதில் வழக்கறிஞர் ஜெயசுதா மாநில குழந்தைகள் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் உறுப்பினர், டாக்டர் ஜெயந்தி மகப்பேறு மருந்துவர், கோமதி ஏ பி ஏ வணிகவியல் இணைப்பேராசியர் மேலும் பலர் கலந்துகொண்டனர் விழாவிற்கு அறக்கட்டளையின் தலைவர் ரமேஷ் மாரிமுத்து தலைமை ஏற்றார்



# திருவையாறில் தஞ்சை மாவட்ட கலெக்டர் தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு

தஞ்சாவூர் மார்ச். 18-

திருவையாறு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பு இடமாகும். இது திருவையாறு தாலுக்கா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணன் மேற்பார்வையில் உள்ளது. அதை தஞ்சை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆய்வு மேற்கொண்டார். அங்கு வாக்கு பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள இடம். பறக்கும் படை, மண்டல அலுவலர்கள், நிலையான கண்காணிப்பு குழு, வீடியோ கண்காணிப்பு குழு மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் குறித்த விபரங்களையும் கேட்டு அறிந்தார் . ஆய்வின் போது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் முருகக்குமார் உடன் இருந்தார் மேலும் தேர்தல் வேலை பணிகளை செய்ய வேண்டியதை குறித்து அதிகாரியிடம் அறிவுறுத்தினார்







■ சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு அச்சக உரிமையாளர்கள், திருமண மண்டப உரிமையாளர்கள் மற்றும் நகை அடகு கடை நடத்துபவர்கள் ஆகியோர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இன்று (17.3.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.விஜயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.ஸ்ரீதரண் மற்றும் அச்சக உரிமையாளர்கள், திருமண மண்டப உரிமையாளர்கள், நகை அடகு கடை நடத்துவோர் உட்பட பலர் உள்ளனர்.

# திண்டுக்கலில் சிறு தொழில் நிறுவனங்களுக்கான தனது புதிய LAP கிளையைத் தொடங்கும் ECL ஃபைனான்ஸ்

திண்டுக்கல், மார்ச். 18-

எடல்வைஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் வங்கிசாரா நிதி நிறுவன (NBFC) பிரிவான, ணிசிலி ஃபைனான்ஸ் லிமிடெட் (ECLF), இன்று திண்டுக்கல் நகரில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு சொத்து மீதான கடன் (LAP) வழங்கும் சிறப்பு நோக்கத்துடன் ஒரு புதிய கிளையைத் திறந்துள்ளது. தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலங்களில் ஒரே நாளில் 19 புதிய கிளைகளைத் திறக்கும் மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதியாக இது அமைகிறது.



திண்டுக்கல் நகரில் அமைகின்ற இந்த புதிய கிளை சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கடன்களை, எளிமையாகவும் சரியான நேரத்திலும் வழங்குவதற்கான நோக்கத்துடன் திறக்கப்பட்டுள்ளது. ஏராளமான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) நிறுவனங்களைக் கொண்ட திண்டுக்கல், தொழில்முனைவுக்கான முன்னெடுப்புகளின் வளர்ச்சிக்கு கணிசமான வாய்ப்புகளை கொண்டிருக்கிறது.

சிறு தொழில் நிறுவனங்களுக்கு சொத்து மீது கடன் வழங்கும் திட்டத்தின் மூலம், வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைக் கட்டடங்களின் மீது 50 லட்சம் ரூபாய் வரை ECL ஃபைனான்ஸ் கடன்களை வழங்குகிறது. எளிமையான நடைமுறைகள், கடன் தகுதி மீது விரைவான மதிப்பீடு மற்றும் குறித்த காலஅளவுக்குள் கடன் தொகை விநியோகம் ஆகியவற்றின் மூலம், சிறு தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான நிதி உதவியை எளிதாகப் பெற இத்திட்டம் வழிவகுக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ECL ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அஜய் குரானா, “வளர்ந்து வரும் வணிகச் சந்தைகளில் கடன் வசதிகளைப் பெறுவதை எளிதாக்குவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம் திண்டுக்கல்லில் நாங்கள் தொடங்கியுள்ள இந்தப் புதிய கிளை இதன் மீதான எமது பொறுப்புறுதிக்கு எடுத்துக்காட்டாகும். 19 கிளைகளை இரு மாநிலங்களில் ஒரே நேரத்தில் தொடங்குவதன் மூலம், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நெகிழ்வுத்தன்மையுள்ள நிதி உதவிகளைச் சரியான நேரத்தில், நாங்கள் இந்தக் கிளைகளின் மூலம் வழங்குவோம். இத்தொழில் நிறுவனங்களின் வணிகம் வளர்ச்சி பெறுவதற்கு உதவும் வகையில் எங்களின் பணிகளை இதன் மூலம் நாங்கள் விரைவுபடுத்துகிறோம் என்று கூறினார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் "சபாநாயகி" என்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்ட கதாபாத்திரத்தின் வாயிலாக பொதுமக்களிடையே தேர்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "என் வாக்கு என் உரிமை" என கையெழுத்திட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர்கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தொடங்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வானதி ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை பழங்காநத்தம் பகுதியில், பாலியல் வன்முறை மற்றும் போதைப் பொருள் பிரச்சனைகளை முன்னிறுத்தி தி.மு.க. அரசை கண்டித்து தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) கட்சிகள் சார்பில் கடும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில் நடந்த இந்த போராட்டத்தில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜு, ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.மேலும், எம்.எல்.ஏ.க்கள் ராஜன் செல்லப்பா, பெரியபுள்ளான் மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மகேந்திரன், நீதிபதி, அண்ணாதுரை, ராஜாங்கம், கே.எஸ்.கே. ராஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் ராஜ் சத்யன், டேவிட் அண்ணாதுரை, ஜெ. ராஜா, வக்கீல் ரமேஷ், நிலையூர் முருகன், மூ.மு.க. வேலுசாமி, பகவதி உள்ளிட்ட பலர் திரளாக பங்கேற்றனர்.

# “ரஜினி விவகாரத்தில் ஆதவ் அர்ஜூனாவை விஜய் கண்டிக்காதது ஏன்?” நயினார் நாகேந்திரன் கேள்வி

சென்னை, மார்ச்.18-

‘‘திரையுலகில் முடிசூடா மன்னராக இருக்கக்கூடிய ரஜினியை, ஆதவ் அர்ஜூனா விமர்சித்துள்ளது வருந்தத்தக்கது, வேடிக்கையானது. ரஜினியின் ரசிகர்கள் நிச்சயம் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், மன்னிக்க மாட்டார்கள். இதை, தவெக தலைவர் விஜய் கண்டிக்காதது ஏன்?’’ என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேஜ கூட்டணி சார்பாக இபிஎஸ் தலைமையில் தமிழகத்தில் தேர்தலை சந்திக்க இருக்கிறோம். திமுக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தது. ஆனால் ஒன்று, இரண்டை தவிர வேறு எதையுமே நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றுகிற வகையில், திசை திருப்பியது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி, தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் தங்களது குடும்பம் ஆள வேண்டும் என்பதற்காக பல்வேறு தவறான திட்டங்களை, தவறான செய்திகளை பரப்பி வருகின்றனர். அதோடு, துணை முதல்வர் உதயநிதியை மீண்டும் முதல்வராக்க வேண்டும் என்பதற்காக, பல அறிவிப்புகளை சொல்லி வருகின்றனர்.

தேர்தலையொட்டி, தற்போது மக்களுக்கு கோடை நிதி, பொங்களுக்கு நிதி உள்ளிட்டவற்றை அறிவித்து மக்களை திசை திருப்பி வருகிறார்கள். அதிகார பணம், பண பலத்தை மட்டும் வைத்து மீண்டும் ஆளும்கட்சியாகிவிடலாம் என நினைக்கிறார்கள். ஆனால் அது நடக்காது.

தமிழகத்தில் கஞ்சா, போதைப் புழக்கம் அதிகரித்துள்ளது. இவரின் ஆட்சியில், 1,977 கொலைகள் நடந்துள்ளன.குறிப்பாக, 361 குழந்தைகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 38 பெண் குழந்தைகளை கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

எங்கள் கூட்டணிக்குள் தவெக வருவது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. திரையுலகில் முடிசூடா மன்னராக இருக்கக்கூடிய ரஜினியை, ஆதவ் அர்ஜூனா விமர்சித்துள்ளது வருந்தத்தக்கது, வேடிக்கையானது. அவர் ஒரு ஆன்மிகவாதி. ரஜினியின் ரசிகர்கள் நிச்சயம் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், மன்னிக்க மாட்டார்கள்.


இதை, தவெக தலைவர் விஜய் கண்டிக்காதது ஏன்? ஆதவ அர்ஜூனா மன்னிப்பு கேட்க வேண்டும். இவ்விவகாரம் குறித்து முதன்முதலாக குரக் கொடுத்தது பாஜக தான். தொகுதி பங்கீடு குறித்து எங்களுக்குள் எந்தவித சிக்கலும் இல்லை. சுமூகமான முறையில் பேசி முடிவெடுக்கப்படும்’’ என்று தெரிவித்துள்ளார்.

# ஈரான் மீதான தாக்குதலுக்குப் பின் 95 நாடுகளில் பெட்ரோல் விலை உயர்வு

புதுடெல்லி, மார்ச்.18-

ஈரான் மீதான தாக்குதலுக்குப்பின் 95 நாடுகளில் பெட்ரோல் விலை உயர்ந்துள்ளது.

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப்படை மற்றும் ஈரான் இடையிலான பேரரால், 95 நாடுகளில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. அமெரிக்காவில் ஒரு கேலன் (3.8 லிட்டர்) பெட்ரோல் விலை ரூ.2.94 டாலரில் இருந்து 3.58 டாலராக உயர்ந்துள்ளது. இது 20 சதவீத உயர்வாகும்.



அமெரிக்காவில் உள்ள மாநிலங்கள் தங்கள் இஷ்டத்துக்கு பெட்ரோல் விலைகளை உயர்த்தியுள்ளன. பல மாநிலங்களில் ஒரு கேலன் பெட்ரோல் 4 டாலரை தாண்டிவிட்டது. கலிபோர்னியாவில் ஒரு கேலன் 5 டாலரை தாண்டிவிட்டது. இது கடந்த 2 ஆண்டுகளில் மிக அதிகமான விலை உயர்வாகும். சில நாடுகள் மாத இறுதியில் தான் எரிபொருள் விலை மாற்றத்தை அறிவிக்கும்.

அதனால் அடுத்த மாதம் முதல் பல நாடுகளில் பெட்ரோல் விலை அதிகரிக்கும். கம்போடியாவில் பெட்ரோல் விலை அதிகபட்சமாக 68 சதவீதம் உயர்ந்துள்ளது. வியட்நாமில் 50 சதவீதம், நைஜீரியாவில் 35 சதவீதம், லாவோஸில் 33 சதவீதம், கனடாவில் 29 சதவீதம் பெட்ரோலிய எரிபொருள் விலை உயர்ந்துள்ளன.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கொண்டு வரப்படும் பெட்ரோலிய எரிபொருட்களை ஆசிய நாடுகள் அதிகம் சார்ந்துள்ளன. கிழக்கு ஆசியாவில் உள்ள ஜப்பான் 95 சதவீத எரிபொருளையும், தென் கொரியா 70 சதவீத எரிபொருளையும் ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றன. அதனால் இவை அவசர கால நடவடிக்கைகளை அமல்படுத்தியுள்ளன. தென் கொரியா கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக பெட்ரோல், டீசலுக்கு அதிகபட்ச விலையை நிர்ணயித்துள்ளது.

தெற்காசிய நாடுகளில் பாதிப்பு இன்னும் மோசமாக உள்ளது. பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்தில் எரிபொருள் சேமிப்பு வசதி குறைவாக உள்ளது. இதனால், வங்கதேச அரசு பல்கலைக்கழகங்களை மூட உத்தரவிட்டுள்ளது. பாகிஸ்தானில் அரசு அலுவலகங்கள் வாரத்துக்கு 4 நாட்கள் மட்டுமே இயங்குகின்றன. பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

எரிபொருளை சேமிக்க 50 சதவீத பணிகள் வீட்டிலிருந்தே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலை உயர்வு குறித்து ஆலோசிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஜி 7 நிதியமைச்சர்களின் அவசர கூட்டம் நடைபெற்றது. அவசர கால எரிபொருள் சேமிப்பிலிருந்து 20 முதல் 30 சதவீதம் எரிபொருட்களை விடுவிக்கும் ஆலோசனையை பிரான்ஸ் அதிபர் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வு காரணமாக அத்தியாவசியப் உணவுப் பொருட்களின் விலை எல்லாம் உலகம் முழுவதும் உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை உயர்வால் போக்குவரத்து செலவும் அதிகரித்துள்ளது.



# கிருஷ்ணகிரியில் குடிநீர் வசதி திறப்பு ரூ.44.77 லட்சத்தில் புதிய தார்சாலை பணிகள் தொடக்கம்

கிருஷ்ணகிரி, மார்ச். 18-

கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மாவட்ட விளையாட்டு அரங்கில் ரூ.4.50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய ஆர்.ஓ. குடிநீர் குழாய் வசதியை, அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அசோக்குமார் மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த புதிய குடிநீர் வசதி மூலம் விளையாட்டு அரங்கில் பயிற்சி பெறும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும் நிலையில், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி ஒன்றியம் வெலகலஹள்ளி பஞ்சாயத்துக்குட்பட்ட பாசிப்பட்டி கிராமத்தில், பாசிப்பட்டி முதல் தொட்டிப்பள்ளம் வரை சுமார் 2.2 கிலோமீட்டர் தூரத்திற்கு, ஊரக சாலைகள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் ரூ.44.77 லட்சம் மதிப்பில் புதிய தார்சாலை அமைக்கும் பணிகளையும் அசோக்குமார் எம்.எல்.ஏ. பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்த சாலை அமைப்புப் பணிகள் நிறைவடைந்தால், கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதி மேம்பட்டு, விவசாய மற்றும் அன்றாடச் செயல்பாடுகள் எளிதாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சோக்காடி ராஜன், சூர்யா, மாவட்ட மகளிர் அணி தலைவி சுகந்தி மாது, கட்சி நிர்வாகிகள் நவாப், வாசு, நகர துணை செயலாளர் குரு, முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் முனிராஜ், புட்டன், முன்னாள் துணை தலைவர்கள் கோவிந்தசெட்டி, பெருமாள், முன்னாள் கவுன்சிலர் துரைசாமி, ஒன்றிய இணை செயலாளர் விஜியன், ஊர்கவுண்டர் கண்ணன், மந்திரி கவுண்டர் ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி அருகே ஆவணமின்றி எடுத்துச் சென்ற ரூ.2.08 லட்சம் பறிமுதல்

கிருஷ்ணகிரி, மார்ச்.18-

தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு அமல்படுத்தப்பட்டுள்ள தேர்தல் நடத்தை விதிகளின் கீழ், கிருஷ்ணகிரி பகுதியில் பறக்கும் படையினர் தீவிர வாகன தணிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரி சட்டசபை தொகுதிக்குட்பட்ட பெல்லாரம்பள்ளி கூட்ரோடு பகுதியில் நிலை கண்காணிப்பு குழுவினர் நேற்று வாகன சோதனை மேற்கொண்டனர். அப்போது அந்த வழியாக வந்த மாருதி ஆல்டோ காரை நிறுத்தி சோதனையிட்டபோது, வெங்கடாபுரம் பகுதியைச் சேர்ந்த சதீஷ்குமார் (30) என்பவர் உரிய ஆவணங்களின்றி ரூ.1.08 லட்சம் எடுத்துச் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அந்த தொகையை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, பெத்ததாளப்பள்ளி அருகே சென்ற போர்டு ஐகான் காரையும் அதிகாரிகள் சோதனை செய்தனர். அதில் அதே பகுதியைச் சேர்ந்த சந்திரகாந்தன் (38) என்பவர் ஆவணங்களின்றி ரூ.1 லட்சம் எடுத்துச் சென்றது தெரியவந்ததால், அந்த தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு இரு சம்பவங்களிலும் மொத்தம் ரூ.2.08 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டு, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான் மற்றும் தாசில்தார் ரமேஷ் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.




# கிருஷ்ணகிரியில் 2வது நாளாக சுவர் விளம்பரங்கள் அகற்றம் தலைவர்களின் சிலைகள் மறைப்பு

கிருஷ்ணகிரி:மார்ச். 18-

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமலுக்கு வந்துள்ள தேர்தல் நடத்தை விதிகளின் படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசியல் கட்சி விளம்பரங்களை அகற்றும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை (தனி), பர்கூர், வேப்பனப்பள்ளி, ஓசூர், தளி உள்ளிட்ட 6 சட்டப்பேரவை தொகுதிகளிலும், அரசியல் கட்சியினர் சுவர்களில் எழுதியிருந்த விளம்பரங்களை அகற்றும் பணி நேற்று முன்தினம் தொடங்கியது.

இதன் தொடர்ச்சியாக, 2வது நாளான நேற்று கூட உள்ளாட்சி துறை பணியாளர்கள் தீவிரமாக செயல்பட்டு, சுவர் எழுத்துகள் மட்டுமின்றி மேம்பாலங்கள் மற்றும் சாலையோர தடுப்புகளில் ஒட்டப்பட்டிருந்த கட்சி போஸ்டர்களையும் அகற்றினர்.

மேலும், தேர்தல் விதிமுறைகளின் படி, அரசியல் சார்ந்த தாக்கத்தை தவிர்க்கும் வகையில், தலைவர்களின் சிலைகள் மற்றும் அவர்களின் புகைப்படங்கள் துணிகளால் மூடப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026முன்னிட்டு செய்தியாளர் சந்திப்பு

குன்னூர், மார்ச். 18-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு., செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026க்கான அறிவிப்பை கீழ்கண்டவாறு வெளியிட்டுள்ளது.வேட்பு மனு தாக்கல் துவங்கும் நாள் 30.03.2026வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026

வேட்பு மனுக்கள் பரிசீலனை

07.04.2026 வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற கடைசிநாள் 09.04.2026 வாக்குப் பதிவு நாள் 23.04.2026 வாக்குகளை எண்ணும் நாள்

04.05.2026 தேர்தல் நடைமுறைகள் முடிவுக்கு வரும் நாள் 06.05.2026 நீலகிரி மாவட்டத்தில் 108 உதகமண்டலம், 109 கூடலூர் (தனி) மற்றும் 110 குன்னூர் உட்பட 3 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. உதகமண்டலம் சட்டமன்ற தொகுதியில் 108 1,88,064 வாக்காளர்களும், 254 வாக்குச்சாவடி மையங்களும் உள்ளன. 109. கூடலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 1,84,663 வாக்காளர்களும் 238 வாக்குச்சாவடி மையங்களும் உள்ளன. 110 குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 1,76,663 வாக்காளர்களும் 244 வாக்குச்சாவடி மையங்களும் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பிற்காக 9 பறக்கும் படை குழுக்கள் (Flying Squads) மற்றும் 9 நிலையான கண்காணிப்பு குழுக்கள் (Static Surveillance Teams) அமைக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் வாகன சோதனை, பணப்பரிமாற்ற கண்காணிப்பு மற்றும் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பொதுமக்கள் தேர்தல் நடத்தை விதிகளை கடைபிடித்து எதிர்வரும்




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2026 அமைதியாக நடந்திட தங்களது ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் ரூ.50,000/ அதிகமான தொகை மற்றும் ரூ.10,000/க்கு மேல் உள்ள மதிப்பிலான பொருட்கள் எடுத்து செல்லும் பொழுது ஆவணங்களுடன் செல்ல அறிவுறுத்தப்படுகின்றனர். உரிய பறக்கும் படையினரின் சோதனையின் போது மேற்படி ஆவணங்களை சமர்ப்பிக்க உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் 7 அறிவுறுத்தப் படுகிறது. நாட்களுக்குள் திரும்ப பெற்றுக்

கொள்ளலாம்.24 மணி நேரமும் செயல்படும் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் பொதுமக்களிடமிருந்து தேர்தல் தொடர்பான புகார்கள் மற்றும் தகவல்களை பெறுவதற்காக, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் அல்லது தேர்தல் தொடர்பான ஏதேனும் புகார்கள் இருப்பின்,கீழ்க்கண்ட தொலைப்பேசி எண்கள் மூலமாக கட்டுப்பாட்டு அறையை தொடர்பு

கொள்ளலாம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

0423 2957101 உதகமண்டலம். 0423 2957102 04232957103 04232957104 04232957105 தேர்தல் நடத்தும் அலுவலர். 108

0423 2957731 உதகமண்டலம் சட்டமன்றத் 0423 2957732 தொகுதி 0423 2957734 உதகமண்டலம். 0423 2957102 0423 2957103 04232957104 04232957105 தேர்தல் நடத்தும் அலுவலர், 108 உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதி 0423 2957731 04232957732 0423 2957734 தேர்தல் நடத்தும் அலுவலர், 109 கூடலூர் (தனி) சட்டமன்றத் தொகுதி 04262295125 04262295126 04262295127 தேர்தல் நடத்தும் அலுவலர், 110 குன்னூர் சட்டமன்றத் தொகுதி 04232951374 04232951375 04232951378 18004252250 மேலும், தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க 1950 மற்றும் 18004252782 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்களையும் பயன்படுத்தலாம்.

பொதுமக்கள் தங்களது வாக்குச்சாவடி நிலையங்கள் பற்றி தெரிந்துகொள்ள 1950 அணுகி தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கியுள்ள C-MT™ (C.Vigil) மொபைல் செயலி மூலம் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பான புகார்களை பொதுமக்கள் பதிவு செய்யலாம் என அறிவுறுத்தப்படுகிறது. இச்செயலி மூலம் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்து புகைப்படம் அல்லது காணொளி ஆதாரங்களுடன் பொதுமக்கள் எளிதாக புகார் அளிக்கலாம்செயலியின் மூலம் பெறப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட பறக்கும் படை குழுக்கள் மற்றும் அமலாக்க அதிகாரிகளால் உடனடியாக சரிபார்க்கப்பட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதலின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள நீலகிரி மாவட்டத்தில் அனைத்து துறை அலுவலர்கள் உட்பட மொத்தம் 6,520 அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

› தேர்தல் நடைபெறும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்களுக்கு தேவையான உறுதியான குறைந்தபட்ச வசதிகள் (கிவிதி) ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க வரிசையில் காத்திருக்க தற்காலிக நிழற்குடை / ஷெட்டு வசதியும் செய்யப்பட்டுள்ளன. ஆண் மற்றும் பெண் வாக்காளர்களுக்காக தனித்தனி கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85. வயதிற்கு மேல் உள்ள மூத்த குடிமக்கள் வாக்குச்சாவடிகளில் வாக்காளிக்க விரும்பும் பட்சத்தில் அவர்கள் வாக்காளிக்க ஏதுவாக வாக்குச்சாவடியில், சாய்வு நடைபாதை (Ramp) வசதி மற்றும் சக்கர நாற்காலி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர்கள் எளிதாக வாக்குச்சாவடியை அடையாளம் காண தேவையான சின்னங்கள் மற்றும் வழிகாட்டி பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியா தேர்தல் ஆணையத்தின் புதிய முன்னெடுப்பாக, வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்காளர் தகவல் சீட்டு (Voter Information Slip) இல் வாக்காளர்களின் பாகம் எண் (Part Number) மற்றும் வரிசை எண் (Serial Number) தெளிவாகவும் பெரிய எழுத்துக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வாக்காளர் தங்களது பெயரை எளிதாக கண்டறிய வாக்குச்சாவடி மையங்களில், அகரவரிசை வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாக்காளர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் எளிதாக கண்டறிந்து சிரமமின்றி வாக்களிக்க இயலும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளுக்கு வருகை தரும் வாக்காளர்கள் தங்களது கைப்பேசிகளை வாக்குச்சாவடிக்குள் கொண்டு செல்லாமல் பாதுகாப்பாக வைக்க ஏதுவாக, வாக்குச்சாவடிக்கு வெளியே நிவீரீமிஷீஸீ பிஷீறீமீ (கைப்பேசி வைக்கும் அலமாரி) வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வாக்குச்சாவடிகளையும், தேர்தல் ஆணையம் கண்காணிக்கும் வகையில் இணைய வழி ஒளிபரப்பு (கீமீதீநீணீமீ வீஸீரீ) செய்யப்படும். இதன் மூலம் தேர்தல் நடைமுறை ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் வரை பொதுமக்கள் தங்களது குறைகளுக்கான மனுக்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறைதீர்க்கும் மனுக்கள் பெட்டியில் போடுமாறு கேட் டுக் கொள்ளப்படுகிறார்கள். நீலகிரி மாவட்ட பொதுமக்கள் அனைவரும் தேர்தல் நாளில் தவறாமல் தங்களது வாக்கினை பதிவு செய்து, வாக்குச் சதவீதத்தை அதிகரிக்க ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட வருவாய் அலுவலர் .நாராயணன், மாவட்ட வருவாய் அலுவலர் (ஜென்மம் நிலங்கள் ) வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் லோகநாயகி (பொது), புனிதா (தேர்தல்கள்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்

தேனி மார்ச். 18-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெறவுள்ளதையொட்டி, தேர்தல் தொடர்பான நன்னடத்தை விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

எனவே, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் நடைமுறைகள் முடிவுக்கு வரும் வரையில், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் செய்ய கூடாதவைகள் போன்றவைகளுக்கான வழிக்காட்டு நெறிமுறைகள் தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும், நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலில் அனைத்து அரசியல் கட்சிகளும், தேர்தல் நடத்தை விதிமுறைகளை சரிவர பின்பற்றி எந்தவித சட்ட ஒழுங்கு பிரச்சனையும் ஏற்படாத வகையில், நேர்மையான, அமைதியான சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு உரிய ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும். குறிப்பாக, அனைத்துக்கட்சிகள் சார்பாக பொதுக்கூட்டங்கள், தெரு முனை பிரச்சாரங்கள் நடத்திட உரிய அனுமதி பெற வேண்டும். எனவே, அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டு, விதிமுறைகளை முறையாக பின்பற்றி, தேனி மாவட்டத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல்2026ஐ சிறப்பான முறையில் நடத்திட அனைத்துக்கட்சி பிரமுகர்களும் முழு ஒத்துழைப்பினை அளித்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பி.சினேஹாப்ரியா. மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் /பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன். தேர்தல் நடத்தும் அலுவலர் /தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி.) கவிதா. தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர். நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர். சையத் முகைதீன் இப்ராஹிம், வட்டாட்சியர் (தேர்தல்). சுருளி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப்பிரதி நிதிகள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.7,000 கோடி மோசடி செய்த நியோமேக்ஸ் சொத்துகளை வாங்க மக்கள் தயக்கம் உயர் நீதிமன்றம் அதிருப்தி



மதுரை, மார்ச்18-

தமிழகத்தில் ரூ.7,000 கோடி அளவில் மோசடியில் ஈடுப்பட்ட நியோமேக்ஸ் நிறுவன சொந்துகளை வாங்க இதுவரை 400 பேர் மட்டும் பதிவு செய்திருப்பது கவலை அளிக்கிறது என உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.

மதுரையைத் தலைமையிடமாக கொண்டு செயல்பட்ட நியோமேக்ஸ் அதிக வட்டி தருவதாக பொதுமக்களிடம் ரூ.7,000 கோடிக்கு மேல் வசூலித்து மோசடி செய்தது. இந்த மோசடி தொடர்பாக வழக்குப் பதிவு செய்து மதுரை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட நிறுவன இயக்குநர்கள் பலர் ஜாமீன் பெற்றனர். இவர்களின் ஜாமீனை ரத்து செய்யக்கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பலர் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை நீதிபதி பரத சக்கரவர்த்தி இன்று விசாரித்தார். பின்னர் நீதிபதி, "இதுவரை மொத்தம் எத்தனை பேர் மின்னணு சொத்து ஏலத்தில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர்?'' எனக் கேள்வி எழுப்பினார்.

பொருளாதார குற்றப்பிரிவு தரப்பில், "400க்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர்'' எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு நீதிபதி, "ரூ.7,000 கோடி மோசடி நடந்துள்ளது. நீதிமன்றம் பலகட்ட முயற்சிகளை எடுத்து நியோமேக்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான மனையிடங்களை விற்பனை செய்ய இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இருப்பினும் 400 பேர் தான் பதிவு செய்துள்ளனர் என்பது கவலை அளிக்கிறது.

இது, பொருளாதார குற்றப்பிரிவு தரப்பில் இன்னும் கூடுதலாக விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்பதையே உணர்த்துகிறது'' எனக் குறிப்பிட்டார்.

அதற்கு அரசுத் தரப்பில், "நியோமேக்ஸ் நிதி நிறுவனங்களுக்கு சொந்தமான டிடிசிபி அங்கீகாரம் பெற்ற மனையிடங்களுக்கான ஏலம் எம்எஸ்டிசி வலைத்தளம் மூலம் மார்ச் 17ஆம் தேதி தொடங்குகிறது. இதில் கலந்து கொள்ள விரும்பும் நபர்கள் வலைதளத்தில் பதிவு செய்து, ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் மார்ச் 23, 24ஆம் தேதிகளில் பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்தை அணுகி உதவி பெறலாம். ஏலம் விடப்படும் சொத்துகளின் விபரங்களை அறிய விரும்பினால், பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்துக்கு நேரிலோ அல்லது அலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என விளம்பரம் செய்யப்பட்டுள்ளது'' எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, "நியோமேக்ஸ் நிறுவனங்களுக்கு சொந்தமான மனையிடங்கள் மின்னணு ஏலம் விடப்படுவது தொடர்பாக போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த அறிவுறுத்தி வழக்கை மார்ச் 23ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்

# சிவகங்கை மாவட்ட 2026 சட்டமன்றத் தேர்தல் முன்னேற்பாடுகள் மாவட்ட தேர்தல் அலுவலர் கா.பொற்கொடி விளக்கம்

சிவகங்கை மார்ச். 18-

சிவகங்கை மாவட்டத்தில் 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் முன்னேற்பாடுகள் மற்றும் தேர்தல் நடத்தை விதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் கா.பொற்கொடி செய்தியாளர்களிடம் விளக்கினார். அதன் விவரம் பின்வருமாறு:தேர்தல் கால அட்டவணை

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, சிவகங்கை மாவட்டத்தில் தேர்தல் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. முக்கிய தேதிகள்:

* வேட்புமனு தாக்கல் தொடக்கம்: மார்ச் 30, 2026 * வேட்புமனு தாக்கல் இறுதி நாள்: ஏப்ரல் 6, 2026 * வேட்புமனு பரிசீலனை: ஏப்ரல் 7, 2026 * மனுக்களை திரும்பப்





பெற இறுதி நாள்: ஏப்ரல் 9, 2026 * வாக்குப்பதிவு நாள்: ஏப்ரல் 23, 2026 * வாக்கு எண்ணிக்கை: மே 4, 2026

தொகுதிகள் மற்றும் வாக்காளர்கள் விவரம்சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளின் புள்ளிவிவரங்கள்:

| தொகுதி எண் - பெயர் | வாக்காளர்கள் எண்ணிக்கை | வாக்குச்சாவடிகள் ||||||
184 காரைக்குடி | 3,03,371 | 388 |

| 185 திருப்பத்தூர் | 2,73,456 | 368 || 186 சிவகங்கை | 2,76,156 | 393 || 187 மானாமதுரை (தனி) | 2,57,616 | 369 |

கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறைகள்தேர்தல் நடத்தை விதிகளை கண்காணிக்கவும், புகார்களைப் பெறவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன: * குழுக்கள்: 36 பறக்கும் படைகள், 36 நிலையான கண்காணிப்புக் குழுக்கள், 4 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் 140 மண்டலக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. * கட்டுப்பாட்டு அறை: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும்.

* தொடர்பு எண்கள்: 1950 (கட்டணமில்லா எண்) மற்றும் 1800425 7036. * C VIGIL செயலி: பொதுமக்கள் இந்த இணையதளம்/செயலி வாயிலாக விதிமீறல் புகார்களைப் பதிவு செய்யலாம்.முக்கிய விதிமுறைகள் * பொதுக்கூட்டங்கள்: அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டம் நடத்தவும் வாகனங்களைப் பயன்படுத்தவும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உரிய அனுமதி பெற வேண்டும். * விளம்பரங்கள்: நகர்ப்புறங்களில் பொது மற்றும் தனியார் இடங்களில் போஸ்டர் ஒட்டுதல், சுவரில் எழுதுதல் தடை செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உரிமையாளர் அனுமதியுடன், பொதுமக்களுக்கு இடையூறின்றி விளம்பரம் செய்யலாம். * ஆயுதங்கள்: துப்பாக்கி உரிமம் வைத்துள்ளவர்கள் உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையங்களில் அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

* மக்கள் குறைதீர்க்கும் கூட்டங்கள்: தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் குறைதீர்க்கும் நாள் கூட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்கள் மனுக்களை ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடலாம். வாக்காளர்கள் அனைவரும் ஏப்ரல் 23ம் தேதி தங்களது ஜனநாயக கடமையை தவறாமல் ஆற்ற வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் கா.பொற்கொடி கேட்டுக்கொண்டுள்ளார். இச்சந்திப்பின் போது காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.செல்வசுரபி ஆகியோர் உடனிருந்தனர்.

# தத்துக் குழந்தை வயது எதுவாகினும் தாய்க்கு மகப்பேறு விடுப்பு உண்டு: உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி, மார்ச்.18-

தத்தெடுக்கும் குழந்தையின் வயது எத்தகையதாக இருந்தாலும் தாய்க்கு மகப்பேறு விடுப்புக்கு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தத்தெடுக்கும் தாய், மூன்று மாதங்களுக்கு உட்பட்ட குழந்தையை தத்தெடுத்தால் மட்டுமே 12 வார கால மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என்று கூறும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 60(4)ஐ எதிர்த்து வழக்கறிஞர் ஹம்சா நந்தினி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு



தொடுத்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று தனது தீர்ப்பை அளித்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பில், ''மூன்று மாதங்களுக்கு உட்பட்ட குழந்தையை தத்தெடுத்தால் மட்டுமே 12 வார கால மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என்று கூறும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 60(4), அரசியலமைப்பின் 14 மற்றும் 21 ஆகிய சரத்துகளுக்கு முரணானது. எனவே, சட்டப்பிரிவு 60(4) ரத்து செய்யப்படுகிறது'' என தெரிவித்துள்ளது.

மேலும், தாய்க்கு வழங்கப்படும் மகப்பேறு விடுப்பை (maternity leave) போல, தந்தைக்கான விடுப்பையும் (paternity leave) சமூக பாதுகாப்புச் சலுகையாக அங்கீகரிக்கும் வகையில் ஒரு சட்ட விதியை மத்திய அரசு வகுக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.





# ஒடிசா மருத்துவமனை தீ விபத்தில் 10 நோயாளிகள் உயிரிழப்பு

புவனேஸ்வர், மார்ச்.18-

ஒடிசாவின் கட்டாக் நகரில் எஸ்சிபி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது.

இங்கு நேற்று அதிகாலை 3 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு படையினர் விரைந்து தீயை அணைத்தனர். எனினும் தீ விபத்தில் 10 நோயாளிகள் உயிரிழந்தனர். மேலும் மருத்து வமனை ஊழியர்கள் 11 பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவம் நிகழ்ந்த சிறிது நேரத்திலேயே, ஒடிசா முதல்வர் மோகன் சரண் மாஜி, அமைச்சர் முகேஷ் மகாலிங்குடன் மருத்துவமனைக்கு சென்று, நிலைமையை ஆய்வு செய்தார்

# மதுரை மாநகர காவல் துறையில் புதிய துணை ஆணையர் பொறுப்பேற்பு

மதுரை, மார்ச்.18-

மதுரை மாநகர காவல் துறையில் தலைமை இடத்து துணை ஆணையராக M.P. திவ்யா பொறுப்பேற்று கொண்டுள்ளார்.



நாமக்கல் மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் 2014 ஆண்டு (Group-1) தேர்ச்சி பெற்று பதவி உயர்வில் கோவை மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் கூடுதல் துணை ஆணையராகவும், கோவை மாநகர தலைமை இடத்து துணை ஆணையராகவும் பதவி வகித்துள்ளார்.



# புதிய வரி விதிப்பு முறை அமலாகும் வரை இந்தியா அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் நிறுத்திவைப்பு

புதுடெல்லி, மார்ச்.18-

அமெரிக்காவில் புதிய வரி விதிப்பு முறை அமலாகும் வரை அந்த நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தன. இதில் இந்தியாவுக்கு 18% வரி விதிக்கப்படும் என உடன்பாடு எட்டப்பட்டது. எனினும் இது தொடர்பான ஒப்பந்தம் மார்ச் மாதத்தில் கையெழுத்தாகும் என தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில், உலக நாடுகளுக்கு அதிபர் ட்ரம்ப் தன்னிச்சையாக வரி விதித்தது செல்லாது என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

இருப்பினும், சில மணி நேரங்களுக்குப் பிறகு, வர்த்தக சட்டத்தின் 122வது பிரிவின்படி, 10 சதவீத வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். பின்னர் இந்த வரியை 15 சதவீதமாக உயர்த்தினார். இந்த வரி விதிப்பை 150 நாட்களுக்கு மட்டுமே அமல்படுத்த முடியும். இதையடுத்து, திட்டமிட்டபடி அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவது நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் புதிய வரி விதிப்புக் கட்டமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னரே இந்தியா அமெரிக்கா இடையிலான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று வர்த்தக துறைச் செயலாளர் ராஜேஷ் அகர்வால் நேற்று தெரிவித்தார்.

# "உக்ரைனின் உண்மைத் தோழர்" ஆஸ்கர் விழாவை தவிர்த்த நடிகர் சீன் பென் குறித்து ஜெலன்ஸ்கி நெகிழ்ச்சி

கீவ், மார்ச்.18-

98வது ஆஸ்கர் விருது விழாவில் சிறந்த துணை நடிகருக்கான விருதை நடிகர் சீன் பென் வென்றார். இருப்பினும் அந்த விழாவை தவிர்த்துவிட்டு ரஷ்ய படையெடுப்பால் போர் சூழல் நிலவும் உக்ரைனுக்கு அவர் சென்றார். அது இப்போது பேசு பொருளாகி உள்ளது.

65 வயதான நடிகர் சீன் பென், 'ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்' படத்தில் நடித்ததற்காக சிறந்த துணை நடிகருக்கான ஆஸ்கர் விருதை வென்றார். இந்திய நேரப்படி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஆஸ்கர் விழா நேற்று (மார்ச் 16) காலை நடைபெற்றது. இந்த விழாவை அவர் தவிர்த்துவிட்டு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை சந்திக்க அவர் புறப்பட்டார்.

கடைசி வரை தனது பயண திட்டத்தை சீன் பென் தெரிவிக்காமல் இருந்தால். இந்நிலையில், உக்ரைன் அரசின் ரயில்வே துறை பகிர்ந்து சமூக வலைதள பதிவில் அவர் ரயிலை பயணிக்கும் பதிவு பகிரப்பட்டது.



"ஆஸ்கருக்கு பதிலாக உக்ரைன் சீன் பென் தேர்வு செய்தார். இதை இப்போது நாங்கள் அதிகாரபூர்வமாக அறிவிக்கலாம்'' என அதற்கு கேப்ஷன் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சீன் பென் உடனான சந்திப்பை சமூக வலைதள பதிவு மூலம் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பகிர்ந்தார். இந்த சந்திப்பு கீவ் நகரில் உள்ள அதிபர் மாளிகையில் நடைபெற்றதாக தகவல். இருப்பினும் இந்த சந்திப்பில் அவர்கள் என்ன பேசினார்கள் என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

''சீன், உங்களுக்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் உக்ரைனின் உண்மைத் தோழர் என்பதை நாங்கள் அறிவோம். போரின் முதல் நாள் முதலே நீங்கள் உக்ரைன் பக்கம் உறுதுணையாக நிற்கிறீர்கள். இன்று வரை அது அப்படியே உள்ளது'' என ஜெலன்ஸ்கி அந்தப் பதிவில் கூறியுள்ளார்.

ரஷ்ய படையெடுப்பு குறித்து ஆவணப்படம் ஒன்றையும் நடிகர் சீன் பென் பதிவு செய்துள்ளார். ரஷ்ய உக்ரைன் இடையிலான நான்கு ஆண்டு கால போருக்கு மத்தியில் பல்வேறு முறை உக்ரைன் சென்று, தனது நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தி உள்ளார். மூன்று முறை ஆஸ்கர் விருதை வென்ற அவர், அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானின் கார்க் தீவைக் கைப்பற்ற அதிபர் ட்ரம்ப் திட்டம் அமெரிக்க அதிகாரிகள் தகவல்

வாஷிங்டன், மார்ச்.18-

ஈரானின் 90 சதவீத கச்சா எண்ணெய் ஏற்றுமதி கார்க் தீவில் நடைபெறுவதால், அதை கைப்பற்றும் நடவடிக்கையை அதிபர் ட்ரம்ப் மேற்கொள்ளலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்துக்கு ஈரான் கடும் நிபந்தனை விதித்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள போர்க் கப்பல்களை அனுப்ப அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விடுத்த கோரிக்கையை நேட்டோ நாடுகள் ஏற்கவில்லை. இந்த விஷயத்தில் நேட்டோ நாடுகள் உதவவில்லை என்றால், மோசமான எதிர்காலத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரானின் 90 சதவீத கச்சா எண்ணெய் ஏற்றுமதி கார்க் தீவில் நடைபெறுகிறது. இதனால் ஈரானின் வருவாயை முடக்க, இந்த தீவுக்கு ராணுவத்தை அனுப்பி கைப்பற்றும் திட்டம் குறித்தும் அதிபர் ட்ரம்ப் ஆலோசித்து வருகிறார். ஆனால், இந்த தீவுக்கு அமெரிக்க ராணுவம் சென்றால், ஈரான் பதிலடியில் இறங்கும். சவுதி உட்பட வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் கிடங்குகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தலாம் என கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ரூவேன் அசார் கூறுகையில், "ஈரானுக்குள் ஊடுருவும் எண்ணம் அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் இல்லை. ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த மட்டுமே இரு நாடுகளும் கவனம் செலுத்துகின்றன" என்றார்.

# புதுச்சேரியில் பாஜக என்.ஆர்.காங். கூட்டணியில் முறிவா? தொகுதி பங்கீட்டை புறக்கணித்த ரங்கசாமி

புதுச்சேரி, மார்ச்.18-

பாஜகவுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி புறக்கணித்துள்ளார். இதையடுத்து, இரண்டு மணி நேரம் காத்திருந்த பாஜக மத்திய அமைச்சர் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் தனி விமானத்தில் கட்சி மேலிடத்தை சந்திக்க டெல்லி புறப்பட்டனர்.

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் பாஜக அடங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் வரும் தேர்தலில் போட்டியிட உள்ளதாக தெரிவித்தது. அதன்படி



என்.ஆர்.காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளை பாஜக, அதிமுக, லட்சிய ஜனநாயக கட்சி பிரித்துகொள்ள உள்ளதாக பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா தெரிவித்திருந்தார்.

இதில் பாமகவுக்கு இடம் ஒதுக்காததால் பாமக 30 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிலையில் லாட்டரி அதிபர் ஜோஸ் சார்லஸ் மாரட்டின் கட்சியான லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்க்கக்கூடாது என ரங்கசாமி வலியுறுத்தி வருகிறார்.

இச்சூழலில் நேற்று இரவு மத்திய அமைச்சரும் தேர்தல் பொறுப்பாளருமான மன்சுக் மாண்டவியாவை என்.ஆர். காங்கிரஸ் தரப்பில் அமைச்சர் லட்சுமி நாராயணன், அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், பொதுச்செயலர் ஜெயபால் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் சந்தித்தனர். ஆனால், முதல்வர் ரங்காமி அவரை சந்திக்கவில்லை.

தொடர்ந்து அமைச்சர், கொறடா தரப்பில், தங்கள் தலைவரின் லட்சிய ஜனநாயக கட்சி எதிர்ப்பை தெரியப்படுத்தினர். காரசாரமாக நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு இன்று காலை மீண்டும் பேசுவோம் என்று புறப்பட்டனர். என்.ஆர். காங்கிரஸ் தரப்பிலோ லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்த்தால் பாஜகவுடன் கூட்டணி வேண்டாம் என்று தெரியப்படுத்தியுள்ளனர்.

இச்சூழலில் இன்று காலை 9 மணிக்கு என்.ஆர்.காங்கிரஸ் தரப்புக்காக பாஜகவினர் காத்திருந்தனர். இரண்டு மணி நேரம் ஆகியும் வராததால் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத் தலைவர் செல்வம், மாநிலத் தலைவர் ராமலிங்கம் ஆகியோர் தனி விமானத்தில் டெல்லி புறப்பட்டனர்.

தொகுதியில் போட்டியிட விரும்பும் பாஜகவினர் அடங்கிய பட்டியலை மேலிடத்துக்கு தந்து தற்போதுள்ள என்.ஆர். காங்கிரஸ் நிலைப்பாட்டை தெரிவிக்கவுள்ளனர். இதனால் பாஜக என்.ஆர் காங்கிரஸ் கூட்டணி முறிவு ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக பேச்சு எழுந்துள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161